**செய்தி வெளியீடு எண்:400** **நாள் : 13.08.2015**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் **12.8.2015** அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், **24,942** குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்குவதன் அடையாளமாக **5** குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி ஆகியவற்றையும், **11**–ஆம் வகுப்பு பயிலும் **1518** பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்குவதன் அடையாளமாக **5** பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளையும் வழங்கினார்கள்.

சமையல் அறையில் நாளும் உழன்று கொண்டிருக்கும் இல்லத்தரசிகளின் வேலைப் பளுவையும், நேரத்தையும் வெகுவாகக் குறைக்கும் வகையில் விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டத்தினையும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் **11**–ஆம் வகுப்பு பயிலும் அனைத்து பிரிவு மாணவ, மாணவியரும் சிரமமின்றி பள்ளிக்கு சென்று வர ஏதுவாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறது. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் இதுவரை விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறி வழங்கும் திட்டத்தின் கீழ் **44,596** குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர் மற்றும் மின்விசிறிகளும், **7106** பள்ளி மாணவ, மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது.

**12.8.2015** அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கும் திட்டத்தின் கீழ், தண்டையார்பேட்டை (வார்டு எண்.**38**) மற்றும் புதுவண்ணாரப்பேட்டை (வார்டு எண்.**39**) பகுதிகளைச் சேர்ந்த **24,942** குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்குவதன்

அடையாளமாக 5 குடும்பங்களுக்கு விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின்விசிறி வழங்கினார்கள்.

மேலும், டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பட்டேல் நகரில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப் பள்ளிக்கு 142 மிதிவண்டிகள், திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சென்னை மேல்நிலைப் பள்ளிக்கு 232 மிதிவண்டிகள், புத்தா தெருவில் அமைந்துள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 400 மிதிவண்டிகள், அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளான தண்டையார்பேட்டையில் அமைந்துள்ள முருகதனுஷ்கோடி பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு 410 மிதிவண்டிகள், தண்டையார்பேட்டை நெடுஞ்சாலையில் அமைந்துள்ள சௌந்தரபாண்டி சுப்பம்மாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 334 மிதிவண்டிகள், என மொத்தம் 1518 விலையில்லா மிதிவண்டிகளை 11–ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்குவதன் அடையாளமாக, 5 மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி வாழ்த்தினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திருமதி எஸ். கோகுல இந்திரா, தலைமைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 13.8.2015